# பாடம் 60: கத்தோலிக்கத் திருச்சபைக்கு வெளியிலுள்ள கிறிஸ்தவர்கள் (பகுதி 1)

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், மற்றச் சமயங்களைச் சேர்ந்த அல்லது கடவுளை நம்பாத திருமுழுக்கு பெறாத மக்களுடனான திருச்சபையின் உறவுநிலை பற்றி நாம் கற்றோம். இந்த பாடத்திலும் அடுத்ததிலும், திருமுழுக்கு பெற்ற மற்றும் கிறிஸ்துவை நம்புகிற, ஆனால் கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்களாக இல்லாத கிறிஸ்தவர்கள் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்டது ஒரே திருச்சபை என்றால், கிறிஸ்துவின் உடல் என்று கூறிக்கொள்ளும் பலவித கிறிஸ்தவர்கள் இன்று இருக்கிறது ஏன், மேலும் இன்னும் ஒருவர் மற்றவரோடு முழு ஒற்றுமை ஏற்படாது ஏன்? என்று அடிக்கடி கேட்கப்படுகிறது. மற்றக் குழுக்களைச் சேர்ந்த இந்த கிறிஸ்தவர்கள் யார்?

2. நூற்றாண்டுகளாக, ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதரிய திருச்சபையில் பிளவுகளை ஏற்படுத்திய பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

*வுனித்தாத்திஸ் ரெதிந்தெகிராசியோ,* 3: “கடவுளின் இந்த ஒரே திருச்சபையின் தொடக்கத்தில் இருந்தே சில பிளவுகள் எழுந்தன, அவற்றை திருத்தூதர்கள் வன்மையாகக் கண்டித்தனர். ஆனால் அடுத்துவந்த நூற்றாண்டுகளில் மேலும் அதிகத் தீவிரமான முரண்பாடுகள் தோன்றி, கத்தோலிக்க திருச்சபையின் முழு ஒன்றிப்பில் இருந்து பெரிய குழுமங்களைப் பிரித்தன – அதற்கு, இரண்டு தரப்பு மனிதர்களையும் குற்றஞ்சாட்டலாம்.”

3. கிறிஸ்துவின் உடலின் இன்றைய நிலை கிறிஸ்தவத்தின் வரலாற்றில் ஏற்பட்ட மூன்று பெரும் சர்ச்சைகளையும், அவற்றின் விளைவான பிளவுகளையும் பிரதிபலிக்கிறது.

ஒரு புறம், நாம் ரோமை கத்தோலிக்க திருச்சபையைக் கொண்டிருக்கிறோம். மறு புறம், கிழக்கத்திய திருச்சபைகளின் திரட்சியைக் கொண்டிருக்கிறோம், அவை பொதுவாக கிழக்கத்திய ஆத்தோடாக்ஸ் திருச்சபைகள் மற்றும் கீழை ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகள் பிரிக்கப்படுகின்றன, அவை ஒன்று மற்றதோடு முழு ஒன்றிப்பில் இல்லை. அதைத் தாண்டி, உலகெங்கும் 40,000 பகுப்புகள் ஒருங்கமைந்த மிக முக்கியமான கிறிஸ்தவக் குழுமங்களின் திரட்சி புரட்டஸ்டான்ட் என்று அழைக்கப்படுகிறது. (*குறிப்பு:* இங்குள்ள “பகுப்பு” என்ற பதம் புரட்டஸ்டான்ட் குழுக்களுக்கு மட்டுமே பொருந்தும், கத்தோலிக்க திருச்சபை அல்லது ஆத்தோடாக்ஸ் திருச்சபைகளுக்குப் பொருந்தாது)

இந்த 2.2 பில்லியன் கிறிஸ்தவர்கள் ஒருசேர உலகின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்காக இருக்கின்றனர். வாய்ப்புக்கேடாக, அவர்கள் எல்லாரும் முழு ஒன்றிப்பு நிலையில் இல்லை.

## முதல் பிளவு: கால்செதோனிய சர்ச்சை

1. கி.பி. 451ல் நடைபெற்ற கால்செதோனிய சங்கத்தில், இயேசுவைப் பற்றிக் கட்டுப்பாடற்றுப் பரவியிருந்த பல திரிபுரைகளுக்குப் பதிலாக கால்செதோனிய வாய்பாடு உருவானது: ''இரண்டு இயல்புகளும் எந்த குழப்பமும், மாற்றமும், பிரிவும், பிளவும் இன்றி ஒப்புக்கொள்ளப்படுகிறது''. அதே நேரம், கிறிஸ்துவின் இயல்புகள் குறித்து சரியான நிலைப்பாட்டை சங்கம் ஒப்புக் கொண்டாலும், கிறிஸ்து கொண்டிருந்த இரண்டு இயல்புகளின் ஒன்றிப்பில் அழுத்தம் கொடுக்கவில்லை, ஏனெனில் இரண்டு இயல்புகளும் ஒன்று மற்றதோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பது பற்றி எந்தவொரு விளக்கமும் இல்லை.

சங்கத்தின் இந்த நிலைப்பாடு, கிறிஸ்துவின் இரண்டு இயல்புகளின் *ஒன்றிப்பில்* குறிப்பிட்ட அழுத்தம் கொண்டிருந்த இன்று கீழை ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகள் என்று அறியப்படும் கிழக்கத்திய திருச்சபையின் ஒரு பகுதியை தீவிர கவலையில் ஆழ்த்தியது. ஆகவே, கால்செதோனிய சங்கம் பறைசாற்றிய இந்த வாய்பாட்டை அலெக்சாந்திரிய மறைமுதுவரான டியோஸ்காருஸ் ஏற்க மறுத்தார்.

இதனால் கீழை ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகள் மற்றும் திருச்சபையின் மற்றப் பகுதிக்கு இடையே கி.பி. 451ல் இருந்து அலுவல்பூர்வ பிரிவினை ஏற்பட்டது, அது இந்நாள் வரையிலும் நீடிக்கிறது. அவை கால்செதோனியா சாராத திருச்சபைகள் என்று அறியப்படுகின்றன. அவை முதல் மூன்று பொதுச் சங்கங்களை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றன. கீழை ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகள் பெரிதும் அர்மேனியா, எத்தியோப்பியா, எரித்ரியா, எகிப்து, சூடான், சிரியா, மற்றும் கேரளாவில் (இந்தியா) இருக்கின்றன.

5. அண்மை காலங்களில், கால்செதோனிய மற்றும் கால்செதோனியா சாராத ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகளின் உறுப்பினர்கள், இரு தரப்பினரும் தொடர்புடைய இறையியல் பதங்களை வேறுபட்ட விதங்களில் பயன்படுத்தினாலும், எப்பொழுதும் உண்மையாக கிறிஸ்துவில் ஒரே அதிகாரப்பூர்வ விசுவாசம் கொண்டுள்ளனர் என்ற தெளிவானப் புரிதலுக்கு வந்துள்ளனர். ஆனால் இந்த இறையியல் கண்டுணரல் மற்றும் ஒப்புரவைத் தாண்டி, ஆட்சிப்பகுதி சார்ந்த பிரச்சனைகளின் சிக்கலால் ஆட்சிமுறை சார்ந்த ஒப்புரவு ஒரு பெரிய சவாலாக இருக்கிறது.

6. மலேசியாவில், அதிகம் நிறுவப்பட்ட கீழைத் திருச்சபை குழுமமாக 1928ல் இருந்து நாட்டில் உள்ள ஆர்த்தோடாக்ஸ் சிரியன் திருச்சபை (இந்தியாவின் கேரளாவில் உருவானது) இருக்கிறது. குவாலா லம்பூரின் பிரிஸ்பீல்ட்சில் உள்ள கடவுளின் தாய் புனித மரியா கதீட்ரலில் சுமார் 200 மலையாளக் குடும்பங்கள் வழிபாடு நடத்துகின்றன.

மலாக்காவில் காப்டிக் ஆர்த்தோடாக்ஸ் திருச்சபையும் இருக்கிறது, புனித மரியா மற்றும் புனித மாற்கு காப்டிக் ஆர்த்தோடாக்ஸ் ஆலயம். இது சிட்னி (கீழை ஆர்த்தோடாக்ஸ்) மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## இரண்டாம் பிளவு: பீலியோக் சர்ச்சை

7. திருச்சபையின் தொடக்ககால வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாக, ரோமை பேரரசு முழுவதும், கிழக்கிலும் மேற்கிலும் நிசேயா நம்புகை ஏற்கப்பட்டதாகும். இது திருச்சபையில் கோட்பாட்டு நிலைத்தன்மையைக் கொணரும் நோக்கம் கொண்டிருந்தது. எனினும், கால ஓட்டத்தில், நிசேயா நம்புகையின் *பீலியோக்* பிரிவில் (தூய ஆவியார் ‘‘தந்தையிடம் இருந்து புறப்படுகிறார்’’ என்பதோடு சேர்க்கப்பட்ட பகுதி) உடன்பாடின்மை எழுந்தது. மேற்கத்திய திருச்சபை இந்த நம்புகையில் *பீலியோக்* (லத்தீனில், ‘‘மகனிடம் இருந்தும்’’) தொடரைச் சேர்த்தது.

8. இந்த சேர்க்கைக்கு மேற்கத்திய திருச்சபை ஒரு காரணமுள்ள விளக்கம் வைத்திருந்தது. எனினும், கிழக்கத்திய திருச்சபைக்கு, *பீலியோக்* என்பது இறையியல் சார்ந்து ஏற்புடையதாக இல்லை. இந்த விவாதம் இறையியல் சார்ந்ததாக இருந்தாலும், ஆதிக்கத்திற்கான பல அரசியல் காரணிகள் மற்றும் போட்டியால் கிழக்கத்திய திருச்சபை மற்றும் மேற்கத்திய திருச்சபைக்கு இடையே பிளவு ஏற்பட்டது. ரோமை திருத்தந்தையின் வகிநிலைக்கு மாற்றாக கிழக்கின் மறைமுதுவர்கள் கொன்ஸ்தாந்திநோபிள் ஆயருக்கு ‘‘ஒன்றிப்பின் மறைமுதுவர்’’ என்ற பட்டத்தை அளித்தனர்.

9. கி.பி. 1054ல், கத்தோலிக்கத்தை உலகளாவிய தாய்த் திருச்சபையாக ஏற்க கிழக்கு மறுத்ததால், கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே ஊடிடை புறம்பாக்கல் நடைபெற்றது. 1965ல், மேற்கத்திய திருத்தந்தை மற்றும் கொன்ஸ்தாந்திநோபிள் மறைமுதுவர் இருவரும் 1054ன் கண்டனங்களைச் செல்லாதவை ஆக்கினர். 900 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்த நலமாக்கல் மற்றும் ஒன்றிப்புக்கு பழைய கண்டனங்களின் பின்வாங்கலை விட அதிகம் தேவைப்படுகிறது.

10. கி.பி. 1054ல் உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையில் இருந்து பிரிந்த கிழக்கத்திய திருச்சபைகள், கிழக்கத்திய ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகள் என்று அறியப்படுகின்றன. அவை திருச்சபையின் முதல் ஏழு பொதுச் சங்கங்களை ஏற்கின்றன. கிழக்கத்திய ஆர்த்தோடாக்ஸ் திருச்சபைகள் உலகின் பல பகுதிகளில் இருக்கின்றன, ஆனால் மிகப்பெரும் கிழக்கத்திய ஆத்தோடாக்ஸ் மக்கள்தொகை (150 மில்லியன் உறுப்பினர்கள், உலகளாவிய கிழக்கத்திய ஆர்த்தோடாக்ஸ் மக்கள்தொகையில் பாதி) ரஷ்யாவில் காணப்படுகிறது.

*குறிப்பு:* இங்கு கி.பி. 1054 பிளவைப் பின்பற்றாது ரோமையோடு முழு ஒன்றிப்பில் இருக்கின்ற அல்லது ரோமையோடு முழு ஒன்றிப்புக்குத் திரும்பியுள்ள (குறைந்தது ஆறு வேறுபட்ட

வழிபாட்டு ரீதிகளைச் சேர்ந்த) 23 கிழக்கத்திய திருச்சபைகள் இருக்கின்றன, அதன் பொருள் இவை திருத்தந்தையின் தலைமையை ஏற்கின்றன. கிழக்கத்திய கத்தோலிக்க திருச்சபைகள் என்று அழைக்கப்படுகின்ற இவை, உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையின் ஒரு பகுதியாக இருக்கின்றன.

11. குவாலா லம்பூரில் அண்மையில் நிறுவப்பட்ட அதிதூதர் மிக்கேல் ஆர்த்தோடாக்ஸ் ஆலயத்தில் ரஷ்ய ஆர்த்தோடாக்ஸ் சபையின் வழிபாடு நடத்துகின்றனர்.

12. *தோமினுஸ் யேசுஸ்,* 17: "...கிறிஸ்துவின் ஒரு திருச்சபை மட்டுமே இருக்கிறது, அது கத்தோலிக்க திருச்சபையில் பிழைத்திருக்கிறது, பேதுருவின் வழிவருகிறவராலும் அவரோடு ஒன்றிப்பில் உள்ள ஆயர்களாலும் ஆளப்படுகிறது. கத்தோலிக்க திருச்சபையோடு நேரிய ஒன்றிப்பில் இல்லாத திருச்சபைகளும், அதனோடு நெருங்கியப் பிணைப்பால் ஒன்றித்துள்ளனர், அதாவது, **திருத்தூதரிய வழிவருதல்** மற்றும் **செல்லுபடியாகும் நற்கருணை** இருக்கின்ற **உண்மை தலத் திருச்சபைகள்**. கடவுளின் விருப்பப்படி, ரோமை ஆயரே திருச்சபை முழுவதன் மீதும் ஆட்சி செலுத்துகின்றார் என்ற கத்தோலிக்க முதனிலை கோட்பாட்டை ஏற்காததால், அவை கத்தோலிக்க திருச்சபையுடன் **முழு ஒன்றிப்பில் குறைவுபட்டாலும்**, கிறிஸ்துவின் திருச்சபை இந்த திருச்சபைகளிலும் இருந்து செயல்படுகிறது."

13. கிழக்கத்திய கிறிஸ்தவர்களுடான நமது உறவுநிலை தொடர்பான *ஒன்றிப்புக்கான கொள்கைகள் மற்றும் விதிகளைச் செயல்படுத்துவதற்கான நடத்தேட்டில்* (கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிப்பதற்கான பாப்பிறை மன்றம், 1993) சில முக்கிய அம்சங்கள்:

*புள்ளி 122 (அருளடையாளங்கள் மற்றும் திருவழிபாடு பற்றி)*: கத்தோலிக்க திருச்சபைக்கும் அதனோடு முழு ஒன்றிப்பில் இல்லாத கிழக்கத்திய திருச்சபைகளுக்கும் இடையே, விசுவாசம் குறித்த விடயங்களில் மிக நெருங்கிய ஒன்றிப்பு இருக்கிறது. மேலதிகமாக, "ஆண்டவரின் நற்கருணை கொண்டாட்டத்தின் வழியாக இந்த திருச்சபைகள் ஒவ்வொன்றிலும், கடவுளின் திருச்சபை கட்டியெழுப்பப்பட்டு, உயரத்தில் வளர்கிறது" மேலும் "நம்மிடம் இருந்து பிரிந்து இருந்தாலும், இந்த திருச்சபைகள் உண்மை அருளடையாளங்களை இன்னும் கொண்டுள்ளன, எல்லாவற்றிற்கும் மேலாக – திருத்தூதரிய வழிவருதல் – குருத்துவம் மற்றும் நற்கருணை வழியாக...". இது திருச்சபையியல் மற்றும் அருளடையாளம் சார்ந்த அடிப்படைகளை வழங்குகிறது, கத்தோலிக்க திருச்சபையின் புரிதலின்படி, இந்த திருச்சபைகளுடன் திருவழிபாட்டை, நற்கருணை பகிர்வைக் கூட அனுமதிக்கவும் ஊக்குவிக்கவும் "பொருத்தமான சூழல்கள் மற்றும் திருச்சபை அதிகாரிகளின் ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது". எனினும், கிழக்கத்திய திருச்சபைகள், அவற்றின் திருச்சபை புரிதல் அடிப்படையில், இந்த விடயத்தில் அதிக கட்டுப்பாட்டு ஒழுங்குகளைக் கொண்டிருக்கலாம் என கண்டுணரப்படுகிறது, அவற்றை மற்றவர்கள் மதிக்க வேண்டும். மேய்ப்பர்கள் விசுவாசிகளுக்கு கவனமாக அறிவுறுத்த வேண்டும், அதனால் திருவழிபாடு மற்றும் அவற்றோடு தொடர்புடைய பலவித ஒழுங்குகளின்

இந்த வகையானப் பகிர்தல் குறித்த சரியானக் காரணங்கள் குறித்து அவர்கள் தெளிவாக அறிந்து கொள்வர்.

*புள்ளி 123*: எப்பொழுதெல்லாம் அவசியம் ஏற்படுகிறதோ அல்லது நேர்மையான ஆன்மிக முன்னேற்றம் தேவைப்படுகிறதோ, அப்போது வழுவின் ஆபத்து அல்லது கண்டுகொள்ளாமை தவிர்க்கப்பட வேண்டும், உடல் அல்லது அறநெறி சார்ந்து கத்தோலிக்க திருப்பணியாளரை அணுகச் சாத்தியமில்லாத எந்த கத்தோலிக்கரும், ஒப்புரவு, நற்கருணை மற்றும் நோயில் பூசுதல் அருளடையாளங்களை கீழக்கத்திய திருச்சபையின் திருப்பணியாளரிடம் இருந்து பெறுவது சட்டப்பூர்வமானது.

*புள்ளி 124*: அடிக்கடி நற்கருணை பெறுதல், நற்கருணைக்கு பெறுமுன் ஒப்புரவு பெறுதல் மற்றும் நற்கருணை பெறுமுன் உணவு தவிர்த்தல் போன்ற விடயங்களில் கத்தோலிக்கர்கள் மற்றும் கிழக்கத்திய கிறிஸ்தவர்கள் இடையே நடைமுறை வேறுபாடு உள்ளதால், முறைகேடு மற்றும் கிழக்கத்திய முறையை கத்தோலிக்கர் பின்பற்றவில்லை என்ற ஐயுறல் தவிக்கப்பட வேண்டும். கிழக்கத்திய கிறிஸ்தவர்களோடு சட்டப்பூர்வமாக தொடர்புகொள்ள விரும்பும் ஒரு கத்தோலிக்கர் சாத்தியமான அளவுக்கு கிழக்கத்திய ஒழுங்கை மதிக்க வேண்டும், மேலும் அந்த திருச்சபை அருளடையாளத் திருவிருந்தை தனது உறுப்பினர்களுக்கு மட்டுமானதாகக் கட்டுப்படுத்தி மற்றவர்களை விலக்கி இருந்தால் அதிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

*புள்ளி 125*: கத்தோலிக்க திருப்பணியாளர்கள் ஒப்புரவு, நற்கருணை மற்றும் நோயில் பூசுதல் அருளடையாளங்களை, இந்த அருளடையாளங்களைத் தங்கள் சொந்த விருப்பத்தோடு கேட்கின்ற கிழக்கத்திய திருச்சபையின் உறுப்பினர்களுக்கு சட்டப்பூர்வமாக வழங்கலாம்.

இந்த குறிப்பிட்ட விடயங்களிலும், கிழக்கத்திய திருச்சபைகள் தங்கள் விசுவாசிகளுக்கு ஒழுங்குகளை வழங்க முன்வர வேண்டும், மேலும் நெறிமாற்றத்திற்கான எந்த பரிந்துரையும் தவிர்க்கப்பட வேண்டும்.

*புள்ளி 126 (திருவழிபாட்டு பங்கேற்பு பற்றி)*: கிழக்கத்திய திருச்சபைகளின் அருளடையாளத் திருவழிபாட்டு கொண்டாட்டத்தில் பாடங்களை வாசிக்க கத்தோலிக்கர்கள் அழைக்கப்பட்டால், அவர்கள் அவ்வாறு செய்யலாம். கத்தோலிக்க ஆலயங்களில் நடைபெறும் அத்தகைய வழிபாட்டில் பாடங்களை வாசிக்க ஒரு கிழக்கத்திய கிறிஸ்தவர் அழைக்கப்படலாம்.

*புள்ளி 127 (திருமணக் கொண்டாட்டம் பற்றி)*: கிழக்கத்திய கிறிஸ்தவர்கள் இடையே அல்லது ஒரு கத்தோலிக்கருக்கும் ஒரு கிழக்கத்திய கிறிஸ்தவருக்கும் இடையே கிழக்கத்திய திருச்சபையில் நடைபெறும் கொண்டாட்டத்திற்கு கிழக்கத்திய திருச்சபையின் அதிகாரியால் அழைக்கப்பட்டு, கலப்பு திருமணங்கள் தொடர்பான கீழ்வரும் விதிகளுக்கு ஏற்புடையதாக இருந்தால், ஒரு கத்தோலிக்க திருப்பணியாளர் அதில் பங்கேற்கலாம்.

*புள்ளி 128*: ஒரு கிழக்கத்திய திருச்சபையின் ஓர் உறுப்பினர் கத்தோலிக்க ஆலயத்தில் நடைபெறும் திருமணத்தில் மணத்தோழியாக அல்லது மணத்தோழராக இருக்கலாம்; ஒரு கத்தோலிக்கரும் கிழக்கத்திய ஆலயத்தில் கொண்டாடப்படும் முறையான ஒரு திருமணத்தில் மணத்தோழியாக அல்லது மணத்தோழராக இருக்கலாம். எல்லா விடயங்களிலும் இந்த நடைமுறை, அத்தகைய திருமணங்களில் பங்கேற்கத் தேவையான இரண்டு திருச்சபைகளின் பொது ஒழுங்கிற்கு ஒத்துப்போக வேண்டும்.